ஹரః
உ

உ கணபதி துணை.

---

# திருவருணைக்கலம்பகம்

மூலபாடம்.

# சைவ-எல்லப்பநாவலர்

அருளிச்செய்தது.

---

எழுத்தும் சொல்லும் அடியும் பாட்டும் கையெழுத்துப் பிரதிகளிலே மிகுந்தும் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் பாடந்தோறும் வேறுபட்டிருத்தலால் அப்பிழைகளை நீக்கிச் சுத்தபாடமாக வழங்குவிக்கும் பொருட்டுச் சிலவித்துவான்களின் முன்னிலையிற் பரிசோதித்துச்

சென்னபட்டணத்தில்

விவேகக்கல்விச்சாலைத்தமிழ்த்தலைமைப்புலவராகிய

திருத்தணிகைச்

## சரவணப்பெருமாளையரால்

பூம்பாவை-அண்ணுசாமிமுதலியார்குமாரர்

சிங்காரமுதலியார்

கேட்டுக்கொண்டபடி

கல்விவிளக்க வச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

---

இதன்விலை-அணா [illegible]. சய௵ ஆவணிமீ.

10th April 1861

கணபதிதுணை.

# திருவருணைக்கலம்பகம்.

## மூலபாடம்.

## காப்பு.

(நேரிசைவெண்பா.)

அன்னவயல் சூழருணை யண்ணா மலையார்மேன்
மன்னுங் கலம்பகப்பா மாலைக்குத்-துன்னியசீர்
மெய்க்கோட்டு மேருவெனும் வெள்ளேட்டின் மீதெழுது
கைக்கோட்டு வாரணமே காப்பு.

(கட்டளைக்கலித்துறை.)

சைவத்தின் மேற்சம யம்வே றிலையதிற் சார்சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவா ரமுந்திரு வாசகமு
முய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாளெம் முயிர்த்துணையே

## மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

மணிகொண்ட நெடுங்கடலில் விழிவளர்ந்த மாதவனு
மணிகொண்ட புண்டரிக மகலாத சதுமுகனு
ஞானக்கண் ணதுகொண்டு நாடுமா றுணராதே
யேனத்தின் வடிவாகி யன்னத்தின் வடிவாகி
அடிதேடி யறிவலென வவனியெலா முழுதிடந்து
முடிதேடி வருவலென மூதண்ட மிசைப்பறந்துங்
காணரிய வொருபொருளாய்க் கனகமற விளங்குபெருஞ்
சோணகிரி யெனநிறைந்த சுடரொளியாய் நின்றருள்வோய். — இது எட்டடித் தரவு. ஒன்று.

மலைமிசையி லிருப்பதற்கோ மலைசிலையா வெடுப்பதற்கோ
மலையரையன் மகிழ்வதற்கோ மலையுருவ மெடுத்தனையே.

இத்தலத்தி லைந்தொழிலு மிருபிறப்போ ரறுதொழிலுந்
தத்துவமுந் திருமேனி தரித்திலையே லியலாவே.

இருக்காதி சதுர்வேத மிசைப்பதுநின் பலபேத
மொருக்காலு மொன்றுரைத்த தொன்றுரைப்ப வறியாதே.

கருமுடிவைத் தருகால கற்பமெல்லாங் கடக்கவுநின்
திருமுடியிற் பிறைசிறிதுந் தேயாது வளராதே.

தானவரைக் கடிந்துமலர்ச் சதுமுகனை யொழித்துமற்றை
வானவரை யழித்துநின்கைம் மழுப்படைவாய் மழுங்காதே.

அண்டருக்கு முனிவருக்கு மழலான கொடுவிடத்தைக்
கண்டமட்டு நுகர்ந்திடவுங் கண்டமட்டிற் கடவாதே.

மூவாமை தனக்குநின்றன் முதனடுவீ றிலாதமைக்குஞ்
சாவாமை பிறவாமை தமக்குமிவை சான்றன்றே.

இவை ஈரடித்தாழிசை—ஏழு.

தடவரை நடைகெழு தரமென வருமொரு
கடகரி யுரிவிரி கலையென மருவினை.

படமுடை யரவொடு பகைபடு முடுபதி
தடையற வுடனுறை சடைநெடு முடியினை.

இவை. நாற்சீரோரடியிரண்டு கொண்டவம்போதரங்கம்—இரண்டு.

சிலையென மலையை வளைத்தனை.
திரிபுர மெரிய நகைத்தனை.
கலைமறை யிவுளி படைத்தனை.
கதிரவ னெயிறு புடைத்தனை.

இவை. முச்சீரோரடியம்போதரங்கம். நான்கு.

விதிசி ரத்தினை.
யகழ்க ரத்தினை.
விடைந டத்தினை.
பொதுந டத்தினை.
நதித ரித்தனை.
மதிய ரித்தனை.
நான்க ளாயினை.
கோன்க ளாயினை.

இவை. இருசீரோரடியம்போதரங்கம். எட்டு.

பண்ணுநீ சுவையுநீ பரிதியுநீ பனிக்கதிர்நீ
பெண்ணுநீ யாணுநீ பேதமுநீ யபேதமுநீ.
செங்காலிற் கருங்காலன் சிரமுருள வுதைத்தனையே
சங்காழி முகுந்தனுக்குச் சங்காழி கொடுத்தனையே.
ஆராலு மறவிடுதற் கரியவுனை யொருகரத்து
நீராலு மலராலு நெஞ்சுருகப் பணலாமே.

இவை பெயர்த்தும் ஈரடித்தாழிசை. மூன்று.

எனவாங்கு. - - - இது - தனிச்சொல்.

வேற்று மருந்தால் விடாதவெம் பிறவியை
மாற்று மருந்தா மலைமேன் மருந்தா
வழகிய நாயகி யருளுடைநாயகி
புழுகணி நாயகி பொருந்திய புனிதா
காசியி லிறந்துங் கமலையிற் பிறந்துந்
தேசமர் தில்லையுட் டிருநடங் கண்டு
மரிதினிற் பெறும்பே றனைத்தையு மொருகாற்
கருதினர்க் களிக்குங் கருணையை விரும்பி
யடைக்கலம் புகுந்தன னடியே
னிடர்க்கடல் புகுதா தெடுத்தரு ளெனவே. (க)

இது பத்தடிநேரிசை யாசிரியச்சுரிதகம்.

(நேரிசைவெண்பா.)

வேதநுவல் சோணகிரி வித்தகர்க்கார் வேறுவார்
சோதியிய மானவிவர் சோமனிவ - ராதவனு
மண்ணுங்கா லும்புனலும் வானுமழ லுமிவ
ரெண்ணுங்கா லெல்லா மிவர். (உ)

(கட்டளைக்கலித்துறை)

எல்லா வுயிர்க்கு முயிரரு ணேச ரிவரசைவி
ல்லா தணுவு மசையாத தென்ப தறிந்தனமே
வில்லாடன் மார னிருக்கவும் யோகம் விளைத்தவந்நாட்
புல்லா திருந்தன வெல்லா வுயிருந்தம் போகத்தையே. (ங)

(கலித்துறை.)

போகம் விடுத்தே தாக மெடுத்தே புவியீதே
யோகம் விளைத்தே யாக மிளைத்தே யுழல்வீர்காள்

ராக மவித்தார் மோக மவித்தா ரருணேசர்
கோக னகத்தா ராக நினைத்தே குழையீரோ. (௪)

(அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

குழைபடுத்த விழியிடத்தர் மழுவலத்த ரருணைபத்தர் குளிர்வெற் பூடே
மழையடுத்த துளிநனைக்க மடிசுருக்கி மயிர்பொடித்து வருந்துஞ் சேதா
தழையடுத்த விடையர்பற்று குழலிசைக்கு மனமுருக்கித் தளரு மாலை
பிழைபடுத்த மொழியுரைத்த தலைவருக்கு மிகவிரக்கம் பிறப்பியாதே. (௫)

(எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

யாதவர்கு லத்துநெடு மாதவன்ம ருப்புடைய வேனமிரு கத்துருவமாய்
வேதமொழி பெற்றவய னோதிமமெ னப்பறவை வேடமுமெ டுத்தநிலையோ
வோதருணை வித்தகனை மூவரிலொ ருத்தனென வோதியிடு மற்பமதியீர்
சீதமதி வைத்தமுடி பாதமல ரைச்சிறிது தேடுதனி னைத்தபரமே. (௬)

(எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

பரவை யாடினு நதிக ளாடினும் படியெ லாநடந் தடிக டேயினுங்
குரவ ராயினுங் கனலி னின்றதன் கொதிபொ றுக்கினுங் கதிகி டைக்குமோ
வரவ மாடுசெஞ் சடில ரங்கணு ரமித தாணினைந் தடியர் தம்மொடு
விரவி நீறணிந் தருணை சேர்வரேல் வெற்ற ராயினு முத்த ராவரோ. (௭)

(பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

மூத்தமிழ் முறைமுறை யன்பொடு, மப்பர்க வுணியர்சொல் சுந்தரர், மும்
பொழு துமெதிர்பு கழ்ந்திடு, முதுநூலா—ரத்தர ருணையினெ டுந்திரை, ந
த்துறு திருநதியின் மென்பெடை, யச்சம றவுடன ணைந்துறை, மடநாரை—
யொத்தம னதொடுபு ணர்ந்தவர், சற்றும கல்வதிலை யென்றவ, ருற்றரு
ணையெனவி ருந்தவ, ருளம்வேறு—யெத்தனை கபடதி னைந்தனர், கைப்
பொருள் கருதிந டந்தன, ரொப்படி யிறைவனை நம்புவ, தினநாமே. (௮)

(அறுசீர்க்கழிநெடில் ஆசியவிருத்தம்.)

இனமகளு மருகர்மட மிசையிடு கனன்மழுவை யிறைவனுடல் புகமொ
கனைமுக படகவள கடதட விகடமத கரியின்மத மறநினைவரோ [ழிவரே
வனமருவு மருமுதலை பொருமதலை தாவினிய மதுரகவி மொழிமுதல்வரே
பனகரபி னைபரவு லகமலமொழ தருணகிரி யடிகடம தடியவர்களே. (௯)

(தலைவன்வினாவுதல்-எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

அடியவர் சிந்தையி லினிதுறை சங்கர ரருணைவ ரம்பதி யன்றோ
படியினெ டுங்கரி யனையம தங்கொடு பதறிந டந்திடு மின்றோ
மொழியும ருங்கொள வுணர்கிலிர் நின்றினி யொருவச னஞ்சொல வொன்று
கடியச ரங்களி லிளைஞரு டன்பல கலகவி தம்பயில் கண்ணோ. (௰) [தோ

(அம்மானை-மடக்குத்தாழிசை.)

நாரா யணனறியா நாதரரு ணேசருக்கு
வாரார் சிலைகலைமெய் மாதங்க மம்மானை
வாரார் சிலைகலைமெய் மாதங்க மாமாயி
னாராயுங் காலெடுப்ப தையமன்றோ வம்மானை
யன்னமறி யாதொடுப்ப தையமோ வம்மானை. (௧௧)

(பாங்கிதலைவிக்குரைத்தல்-அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

மானென்பார் கலையென் பார்கைம் மலையென்பார் வழியே தென்பா
ரோனென்பா ரிலையென் பார்யா னேநந்து மாந் தழைநன் றென்பா
ரூனென்பார் நிறையுந் தாரா ருறையுந்தென் னருணை மானே
கானென்பார் குழலை வேந்தர் கருத்தென்னோ கருதுங் காலே. (௧௨)

(புயவகுப்பு—ஆசிரியவண்ணவிருத்தம்.)

கருணைமுக மண்டலத் தொளிர்மகர குண்டலக் கலன்மலிக வின்குழைக் குறவா யிசைந்தன
களபமகில் குங்குமத் தளறுகுடி கொண்டுதட் டியபுழுக ணைந்துமெய்ப் பனிநீர் துளைந்தன
கலைமதிம ழுங்கிநத் தினமிருள டைந்துமுத் தொளிகருக வெண்சுதைத் திருநீ றணிந்தன
கனலிகைய ரிந்துகட் பருதியைமு னிந்துதக் கனைமுடித டிந்துமைத் தலையே வழங்கின
விரணியனு ரங்கிழித் தளவறும தங்கொழித் தெழுநரம டங்கலைத் தடமார் பிடந்தன
விமையமட மங்கைபொற் புளகவிரு கொங்கையிற் சுவடுபட வின்பமுற் றதிலே குழைந்தன
விரவிகிர ணங்கொழித் ததிசயமு டன்கிளைத் தெழுபவள வன்பொருப் பெனவே வளர்ந்தன
விதழியர விந்தமுற் பலமகிழ்செ ருந்திகட் குரவலரி சண்பகத் தொடையா னிறைந்தன
தரியலர்பு ரங்கெடச் சுரர்நரர்ப யங்கெடத் தமனியநெ டுஞ்சிலைச் சிலைநா ணெறிந்தன
[illegible]னுவலத னஞ்செயற் கமர்பொருச ரந்தரச் சரதமென வந்துமற் பொருபோர் புரிந்தன
சலசமலர் மண்டபச் சதுமுகவ யன்றிருத் தலையுட னிலங்குமுத் தலைவே லுவந்தன
தடவிகட கும்பமத் தகதவள தந்தநற் றறுகண்மத குஞ்சரத் துரிபோர் வைகொண்டன
வருணகிர ணங்களிற் பலமணிநெ ருங்கிநச் சரவமிளிர் கங்கணப் பணியான் மலிந்தன
வனவரத மம்பலத் தனிநடமி டுந்தொழிற் கபினய விதங்கள்பெற் றழகோ டிருந்தன
வருமறைதெ ரிந்தசொற் புகலியிறை செந்தமிழ்க் கரசினொடு சுந்தரப் பெருமாள் புகழ்ந்தன
வரிபிரமர் தங்களுக் கரியபத பங்கயத் தருணையதி ருங்கழற் பெருமான் புயங்களே. (௧௩)

(தலைவனைவேண்டல்-மடக்கு எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

புயந்தழுவுங் கண்ணியுஞ்செவ் விதழி யேமால் பூண்டகயற் கண்ணியுஞ்செவ் விதழி யேமால்
வியந்துசொலி னன்னதும்பொன் னிறமே யெங்கண் மின்னிறமும் பொன்னிறமே புயம்பெ றுமை
லயர்ந்திவள்வா டத்தகுமோ வருட்கண் பாரீ ரருணகிரிப் பெரியீரோ யமல ரோநூ
வயந்தவிழா வழகரோ நினைக்க முத்தி வரந்தருவா ரோமலைமேன் மருந்த னாரோ (௧௪)

(இரங்கல். எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

மலைமேன் மருந்த ரருணை சரன்று வலைவீ சிநின்ற வலையே
யலைமே னிறைந்து வருமீ னருந்தி யருகே யிடங்கொள் குருகே
முலைமேன் முயங்கு தலைநாளி லன்பர் மொழிசூண் மறந்த பிழையோ
தலைமேல் வரைந்த படியோ விருந்து தமியேன் வருந்து தகவே. (௧௫)

(தலைவியைப்புகழ்தல்-எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

தகன முறுவலின் மதனைமுனிபவர் சடையி லணியல தலையினு
ரகன லடியொ டுறையு மிறையவ ரருணை வளநக ரரிவையார்
நிகரி றனதட வமுத நிறைகுட நிலவு முகபடம் விலகினாற்
ககன வமரரு நரரு மிகல்கொடு கலக மிடுவரிவ் வுலகிலே (௧௬)

(இதுவுமது-மடக்கு-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

உலககண் டகனை வீருசலந் தரனு ருடறடிந் திடுவார் கடல்விடங் கொளுவார்
குலவுசங் கரனா ரருணையங் கிரிசூழ் குளிர்புனந் தனிலே கிளிகடிந் திடுவார்
மலர்முகஞ் சசியே வடிவமுஞ் சசியே மகரமென் குழையே வருணமென் குழையே
முலையுமந் தரமே யிடையுமந் தரமே மொழியுமா சுகமே விழியுமா சுகமே. (௧௭)

(அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

சுகமேசு கமேயிரும் வந்துபுனஞ் சூழ்கின் றவுமைத்தின மித்தினையுட்
புகமேய விடாதுக டிந்திடுமெம் பொல்லாமையு மின்றுபொ றுத்திடுமின்
மகமேரு நெடுஞ்சிலை யாளரனு மலையாரரு ணாபுரி மால்வரைமே
லகமேசெ லுமாறு துணிந்திதண்விட் டகறுன்பமு மன்பர்வ ரிற்சொலுமே. (௧௮)

(இரங்கல்-அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்,)

சொல்லா ரணத்திற் கறிவரியார் சோணா சலத்திற் சுகங்கடமைக்
கல்லா லெறிந்த பகைக்குவழி காட்டா தொழிதல் கண்டாயே
கொல்லா வம்புஞ் சமர்க்களத்திற் குனியா வில்லுங் கொண்டிருக்கும்
புல்லா டவனே யெமக்குறுதி புகன்றா ரெங்கே யகன்றாரோ. (௧௯)

(பிரிவுவிலக்கல்-அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

ஆரும் விரும்பிய கல்விமே லாசை யுமக்குள தாயிடிற்
பாரும் வென்றொரு மங்கையாப் பாடிய பாவலர் போலவே
சீருந் தருந்தமிழ்ச் செப்பிடு நீர்மை யறிந்திவ ணேகுவீர்
பேரரு நெடுஞ்சிலை பத்தனார் வீறரு ணாபுரி வெற்பரே. (௨௰)

(காலம்-மடக்கு எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

வெற்றிமதன் போர்க்காயம் பிறைக்குங் காலம்
வெங்கனலே போற்காயம் பிறைக்குங் காலஞ்
சற்றுமிரு கரமென்னே சங்கணியாக் காலந்
தலைவர்துறை மறந்தென்னே சங்கணியாக் காலங்
கற்றைநெடுஞ் சடைமுடியா ரடியார்மேன் முழுதுங்
கருணைநாட் டம்புரியு மருணைநாட் டுறையும்
பெற்றவிளந் தென்றன்மறு கிடத்தியங்குங் காலம்
பேதையென் சிந்தைமறு கிடத்தியங்குங் காலம். (௨௧)

(அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

காலிற் றுலங்கு நகத்தானுங் கையிற் பொலிகூர் நகத்தானுஞ்
சீலத் தரக்க னுரங்கொண்டீர் திசைமா முகனைச் சிரங்கொண்டீர்
மேலைப் புரத்தை நகைத்தெரித்தீர் வில்வேள் புரத்தைப் பகைத்தெரித்தீர்
சூலப் படையேன் மழுப்படையேன் சுமந்தீ ரருணை யமர்ந்தீரே. (௨௨)

(மாலையிரத்தல்-மடக்கு அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

அமர்ந்தருணைப்பதி வாழ்வீரோ யன்பர்களன்பினி லாழ்வீரோ
சுமந்தொளிர் சூலமெடுப்பீரோ தோளணி மாலை கொடுப்பீரோ
யிமந்தரு வெண்மதி காயாதே யிருகணெடும்புனல் பாயாதே
கமழ்ந்த குழற்கொடி வாடாதே கங்குலு மிப்படி நீடாதே. (௨௩)

(ஒன்பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்)

நீடாழி ஞாலம் வானொடு தீகாலு லாவு மியாவையு நீறுயகால மாய்விடுநாள்
கோடாழி மால்பி தாமக னாருன கோடி வீழ்தலை கோடூர பாரமி றுறவே
சூடாத மாலைசூடுவர் தோளோடுதோளை வீசுவர் சோணேச மேலசர் சேடனா
யாடாத கோல மாடுவர் பாடாத பாடல் பாடுவ ராராத வோசைகூ றுவரே.
(௨௪)

# திருவருணைக்கலம்பகம்.

(புன்னாகங்கண்டிரங்கல்-கலித்துறை)

கூத்தாடு மருணேசர் வரையன்பர் பொருளன்பு கொண்டென்னையு
நீத்தார்கொ னிழலாரு மிலையாகி நின்றாய் நெடுங்காலமே
பார்த்தாலு மயலெல கிளைத்தாய் சலித்தாய் பசுந்தென்றலாற்
பூத்தாய் பொன் னிறமாக வென்னாக மேயன்ன புன்னாகமே. (உரு)

(இரங்கல்-மடக்கு அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

நாக மெடுத்த வரம்பாளர் நாலு மறைக்கு வரம்பாளர்
தோகை யிடத்தவர் சேணராய் சோண கிரிப்பதி வாணராய்
யாக படுத்த விளங்காவே மன்னவ ணெண்ணம் விளங்காவே
மோகன கத்தி லிருந்தேனே கொண்கனை விட்டு மிருந்தேனே. (உசா)

(ஊசல். மடக்குஎண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்)

இருசரணச் சிலம்பாட வாடீ ரூச லிளமுலைப்பொற் சிலம்பாட வாடீ ரூசன்
மருவுகலை மருங்கசைய வாடீ ரூசல் வரிவளைக்கை மருங்கசைய வாடீ ரூச
லருமறைக ளாலிசைத்தற் கரிதா மைய ரருணகிரிப் பரமர்புக ழடைவே பாடிப்
பொருமிருபட் கயலுலவ வாடீ ரூசல் புயமதனன் கயலுலவ வாடீ ரூசல். (உஎ)

(பாங்கிசொல்லுதல்-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

ஊசலு கைத்திடுவார் குன்றமி ழைத்திடுவா ரொண்டர ளங்கொளுவார் தண்டலை கொய்திடுவா
ராசில்பு னற்குடைவா ரம்மனை பந்துகழங் காடிம கிழ்ந்திடுவார் கோடிம டந்தையரா
மீசர்வி டைக்கொடியார் பூசைசெ யற்கெளியா ரேரரு ணைப்பதிசூழ் மேருவி னிற்கவணை
வீசுதி னைப்புனமே யாவரொ னத்தெளியேம் வேலர்ம னத்திடையே மாலைவி ளைத்தவரோ. (உஅ)

(மடக்குக்கலிவிருத்தம்.)

மாலையென்பாங் கலத்தாரு மறைநாறுங் கலத்தாருங்
கோலமன்ன கலத்தாருங் குறைவில்பரி கலத்தாரு
மாலைவில்வேள் சலத்தாரு மடர்த்தமதா சலத்தாரு
மேல்கலாச் சலத்தாரும் விளங்கருணை சலத்தாரோ. (உகூ)

(தலைவியைப்புகழ்தல்-அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

அருணனொளி தனிலுமொளி ரருமலை மருந்தாய வமலரதி ருங்கழலினர்
மருமலர் விரித்துரதி பெருகருணை யம்பதியின் மருவியம டந்தையிடையா
மொருகொடியி லொன்றுகமு கொருபவள மொன்றுதுமி ழொருமதிய மொன்றுபிறைதா
மிருசிலை யிரண்டுகணை யிருபணை யிரண்டுகுழை யிருமலையி ரண்டு மலையே. (நய)

(எழுதரிதென்றல்-எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

மலையா னந்தர்மகிழ மலிவா னனந்தரொழு மலையா நிலத்து வருவா
ரலையா மனத்தரொரு மிர்தா னனந்தர்தொழு மருணா சலத்தர் வரையீர்
முலையா னைகட்டியிடை வெளிநேர் நிறுத்திமதி முகமா யமைத்த ருகுலா
மலையா லபரப்பியின் றெழுந்தா ளமைப்பனினி யெழுநே னிருப்பு மனமே. (௫௧)

(இரங்கல்-சிலேடை-கட்டளைக்கலித்துறை.)

மேலாடை தோற்றணி சங்காழி கைவிட்டு மென்சிலம்பின்
காலால் வருந்தி நிலங்கிறுங் கோலத்தைக் கண்டிருந்து
மாலால முண்டவ ரண்ணா மலையர்தம் மன்பர்க்கன்றி
மாலா னயாக்கிரங் காரெவ ரீனையொரு வன்கண்ணனோ. (௫௨)

(வெண்பா.)

கண்ணாருக்கும் போதருக்குங் காண்பரிதாய்க் கண்பறித்த
திண்ணருக்கு நல்குயித் தெரிந்ததே-விண்ணருக்காப்
போற்றுவா ரண்ணார் புரமெரித்தா ரொன்பிறவி
மாற்றுவா ரண்ணா மலை. (௫௩)

(இரங்கல்-கலிவிருத்தம்.)

அண்ணா மலையத் தாடற் கிரியே
லெண்ணா மலையத் தவரோய் திலராய்
கண்ணா மலையத் தனைநீர் கலுழும்
விண்ணா மலையத் தரும்வெண் மதியே. (௫௪)

(துணிவு. எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

மதுவாணி றைந்தகுழன் மடவார்தெருங்கருணைமலைமேன்மருந்தர்வரையின்
முதுநீரில் வந்தவலை ரடையாரை மெள்ளிறைவர் முதலேமொழிந்த படியே
யிதுநாக மன்றுமுலை யிதுபூக மன்றுகளு மிதுமேக மன்றளகமே
யதுநீல மன்றுவிழி யதுசாப மன்றுநுத லதுகோப மன்றதரமே. (௫௫)

(நாரைவிடுதூது-எழுசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.)

அருண வெற்பின ரயனி ருக்கவு மரிபி ழைக்கவு மாகவே
திருமி டற்கொரு கருமை வைத்தவர் திருந திக்கய றேடியெ
கருது நெட்டட லசைவ றத்துயில் கபட நித்திரை நாரைகா
ளிருக ணித்திரை யிலையெ னச்சொல விறைவர் பக்கலேகுமே. (௩௬)

(பாங்கிதலைவிக்குரைத்தல் – கட்டளைக்கலித்துறை.)

ஏகார் புனத்துத் தழையாற் கரியட்ட தென்பவொன்றும்
போகாத வூர்க்கு வழிதேடு வார்புலிக் கான்முனியு
நாகா திபருந் தொழுமரு ணாசல நாட்டிலிரந்
தோகா யணங்கனை யாயவர்க் கேது சொலத்தக்கதே. (௩௭)

(எண்சீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்.)

சொர்க்கமெனு மொருபதவி யிருக்க மாலைத் துளவணியு மரிபதவி யிருக்க மேலை
நற்கைலை மலையிருக்க நினைத்தோர்க் கெல்லா நயந்தமுத்தி நகரமொன்றே நல்கா நிற்பீர்
பொற்கையினு லுமைவணங்கிப் பரிந்து பூசை புரிந்துதவந் தெரிந்துதினம் புகழ்வோர்க் கெல்லா
மெற்குலவு புகழருணை யீசனுரோ யினிதளிக்கும் பதவிதனக் கென்செய்வீரோ. (௩௮)

(சித்து-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

வீரத்தை யணிமழுவா ருமைபங் காளர் விளங்கருணைச் சித்தர்யாம் விளம்பக் கேளா
காரத்தை யெமக்கிடுகெஞ் சத்தை யேகோ கனகமெனக் காட்டிடுவோங் கரியோ ருக்குந்
தாரத்தைப் பொன்னாக வளித்தோந் தம்பீ தாம்பரமும் பொன்னாகச் சமைத்தோ மிந்தப்
பாரத்தை யாரறிவா ரயனு கத்தைப் பசும்பொனிற மாகவுமே பாவித் தோமே. (௩௯)

(இதுவுமது-எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

பாதமெமக் களித்தவரு ணேச னூர்க்கின் பச்சிலைபொன் செய்திமையோர் பசிநோய் தீர
வோதுகடை மருந்தளித்த சித்த ரேமியா மொருபிடிசோ றல்லதுகூ ழுண்டோ வப்பா
மாதவர்தந் திருவாணை கரிக ளெல்லா மாதங்க மாக்கிவைப்ப மருந்தில் லாதே
யேதமற நாகமொளித் தராவாச் செய்வோ மிரும்பையும்பொன் னாகவுனாத் திசைவிப் போம். (௪௰)

(தலைவியைப்புகழ்தல்-எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

இதழி யந்தொடைய ருணை யங்கிரியி லிரத முந்திவிடு வலவனே
பதிய டைந்துமறு கினில்வ சந்தனதி படையெ ழுந்ததது பகருவேன்
புதிய கொம்புசிலை வளையி ரண்டருகு பொழியும் வெம்பகழி போயரு
வுதய தந்தமத களிறு டன்கதலி யுபய தண்டுவரு கின்றதே. (௪௧)

(ஒன்பதின்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

வரைக்கனக் சாப சோண கிரிப்புனித கால கால மதிக்குநெடு மாயுர்போலவே
தரைக்குனினி யாரா பாவ ரிவர்க்குமுனி லாம ளிடு தழற்சிகரி யாக னிதியோ
விரைக்கமலவ் வோடை யாவர் புரத்தைமுனி பாண மாவர் விரித்தகொடி யாவ நீதலா
லரக்குமனை தோறு மேறி நடத்துமெரு தாவர் மேவி யிடத்திலுறை தேவி யாவரோ (௪

(கட்டளைக்கலித்துறை.)

ஆனிட பக்கொடி சோண சலனென்று மன்பர் மலர்
தானிட முத்தி தரும்பெரு மானென்றுஞ் சம்புவென்றுங்
கானிட வேடன்முன் னானிட வுண்டது கண்டுமொரு
மானிட மான வனைத்தேவர் செய்வதென் வந்தனையே (௪௩)

(கரி-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

தனையிருக்கு மறைநுதிக்கு மருணை நாதன் சரணமலர் புகழ்களியேஞ் சக்ர பூசை
வினையிருக்கு மவர்க்கெளிதோ வரிதா னையோ விதிதசத்தால் விவரமற்ற விதஞ்சொல் வேழ
பனையிருக்க நெடியகஞ்சா விருக்க வீணை பச்சையாவி லைதுயின்முன பனையன் றேளி
பனையிருக்கப் பணிதுயின்முன் மதுவாந் தெய்வ வாழிவிட்டுப் பாற்கடலை தழுந்தி னனே. (௪௪)

(இதுவுமது-வெண்பா.)

ஆனூர் கொடியா ரருண புரிக்களியேம்
வானுட ரோடே மதியற்றார்-மேனுளிற்
கம்மாகஞ் சாவிலையே தூளிடித்துத் தின்றாலுந்
தம்மாகஞ் சாவிலையே தான். (௪௫)

(பிச்சியார்-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

நாமணிவர் திரிசூல மெதிர்கண் டார்மேற் சக்கிரத்தை விடுவர்சிவ ரசையுந் நாவர்
காமுகரை யாண்டுகொள்ளார் சிவநூல் கேட்பர் கருத்தினின்மா றெரிசனமே காட்டா நிதிய
ராமையர வணிதொடையார் விடையார் வாழு மருணகிரி வளநாட்டி லெங்க டோறுஞ்
சேமநிதி யெனவுலவும் பிச்சி யார்தந் திருப்பெயரை வெளியாக்கித் திரிகின் றோே. (௪௬)

(இதுவுமது-கட்டளைக்கலிப்பா.)

தில்லை மன்று ணடம்புரி பாதனார் தேவ ராயர் திருவரு ணைக்குளே
முல்லை மல்லிகை சண்பகம் பிச்சியார் மொய்த்த வார்குழன் மோகனப் பிச்சியார்
நல்ல மேனியும் பொற்றிரு வேடமே நாடி யிட்டதும் பொற்றிரு வேடமே
யில்லை யாயினு மிவ்விடை யையமே யேற்க வந்தது மிவ்விடை யையமே. (௪௭)

(கார்கண்டு தேர்ப்பாகனொடுசொல்லுதல்-கட்டளைக்கலித்துறை.)

அயங்காட் டியமறை யார்விடை யாள ருணைவெற்பிற்
புயங்காட் டியமணித் தேர்வல வாமுன்பு போனகொண்டற்
சயங்காட்டிக் கோபமுஞ் சாபமுங் காட்டித் தடித்திடித்துப்
பயங்காட்டி னலைந்த மேதனி மேநின்ற மையல்கொடியே. (௪௮)

(வெண்பா.)

பைங்கட் புலிக்குப் பரியவத்தைக் காட்டிநர
சிங்கத் தினையடர்க்குஞ் சீறியே-வெங்கைப்
புழைக்குஞ் சாமுரிதனுப் போர்க்கு மருணைக்கே
தழைக்குஞ் சரபமொன்று தான். (௪௯)

(குறம்-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

ஒன்றுமூன்று நாமுரைக்க வந்துகேளு மரிவைமீ
ருதயமான சுளகுநெல்லு மொற்றைபட்ட தாதலாற்
கன்றுமானு மழுவுமாக மொருவர்வந்து தோன்றினார்
கண்டமட்டி லேகறுப்பர் கைக்கபால ரவரையுஞ்
சென்றுநாடி னருணைமீது காணலாகு நாமமுந்
தேவராய ரவரலாது தெய்வம்வேறு கண்டிலே
நின்றுவாடு மிவடனக்கை யிடர்தவிர்ப்ப ராதலா
னீறுகொண்டு மூன்றுரேகை நெற்றிமீதி லெழுதுமே. (௫௰)

(இரங்கல்-எண்சீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்.)

நெற்றிமீது கண்படைத்த வும்மைமார னெய்வனோ
நீறணிந்த வரனிருக்க நெருப்பதென்றன் முறுகுமோ
வெற்றியான தாளிருக்க மதியமும்மை நலியுமோ
விரவுகஞ்ச மாதுகண்கள் வெயிலின்முன்பு நிற்குமோ
கற்றையான குழலியெந்த வுதவிகொண்டு பகைவெல்வாள்
கருணைகூர்தென் னருணைமேவு கலியுகத்து மெய்யரோ
செற்றலார்கள் புரமெரித்த புகழ்கொண்மெய்ப்ர தாபரே
தேவராய ரோசுகந்த தினவசந்த ராயரே. (௫௧)

(கார்காலசரற்காலங்கள் - அறுசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.)

நினைப்போது தாலே நினைத்தானு மேலோர் சிறப்பான பேறிகுவோர்
வனத்தாடு சோலை சலந்தாடு நீரா மயிற்பேடை காளோடைகாள்
வினைப்பாவி யானென் உடைப்பாயு நீரான் மிகுத்தேறு கார்காலமே
தனித்தாவி சோர்வார் தியக்கால மேநீள் சரற்கால மேகாலமே. (௩௨)

(இளவேனில் - நேரிசையகவற்பா.)

காலையு மாலையுங் கைம்மலர் குவித்து, மாலு மயனும் வணங்குதற் கரியோ
னிமைக்குமுன் னுலக மியாவையும் படைத்தோன், றனக்கொரு தாயுந் தந்தையு மில்லோன்
பழவினைக் கயிற்றிற் பல்லுயிர்ப் பாவை, யழகுற நடிக்கத் திருநடம் புரிவோன்
வினைவலை யறுக்கு மெய்த்தவ வேடன், மனவலைப் பிணிக்கு மான்மத நாதன்
பேறு மறுபத் தாறு யிரம்பொன், மாறுத் தியாக வசந்த விநோத
னண்ணு மலைய னதிருங் கழலன், கண்ணு ரமுதன் கைலைப் பொருப்பின்
மறலித் திசையோன் மலையா சலமென, விருத்திய தருத்திகொண் டிளங்கால் பரப்பிக்
காவலைப் பல்லவக் கனலு வசைப்பக், குறைவற குயில்வாய்க் குறட்டிலி லடக்கிப்
பொறிநிகு மரிக்கரி யதனிடைச் சொரிந்து, விசைத்திடு மஞ்சரிப் பசைக்கோ லசைத்து
மதவி ரதுக்கு வசந்தக் கருமான், பனிமலர்ச் சாயகம் பண்ணி நீட்டினை
னின்னமும் வந்திலர் கேள்வர், புன்னையங் கருங்குழ லன்னமென் னடையே. (௩௩)

(மடக்கு - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

அன்னியமா சடையாரும் பின்னியமா சடையாரு
மடிமாற நடித்தாரு முடிமாற னடித்தாரு
முன்னுமற மொழிந்தாரும் பின்னுமற மொழிந்தாரு
முனைத்திடமா னேற்றாரு மினைத்திடமா னேற்றாரு
மென்னகத்தா முரியாருங் கொன்னகத்தா முரியாரு
மெருக்கிதழி மணத்தாரு முருக்கிதழி மணத்தாரும்
வன்னிவடி வனத்தாருஞ் சென்னிவடி வனத்தாரும்
வருகருணைப் பதியாரும் பெருகருணைப் பதியாரே. (௩௪)

(சம்பிரதம் - எண்சீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.)

பரவைபொருக் கெழவுங் ககனம்வடிப் படவும் பருதிவடக் கெழவு திருதிகுணக் குறவு
மிரவுபகற் படவும் பகலிரவொத் திடவு மெளிதினியற் றிடுவோ மிவைசிலவித் தைகளோ
வரவமணிப் பணியா னலகிரிப் பெருமா னருணகிரிக் கிணையா வவனிதலத் திடையே
கருதிமனத் தினிலே சிறிதுநினைத் தவ[illegible]தியையளித் திடுமோர் பதியுமுணர்ந் தவமே. (௩௫)

(கருணைச்சிறப்பு - வெண்பா.)

உள்ளத்தின் ஞான முயர்ந்தவிடத் தன்றியிருட்
பள்ளத்தி லென்றும் படராதே - வள்ள
லருணா சலப்பெருமா னம்பிகையோர் பாகன்
கருணா சலமாங் கடல். (௫௬)

(பாண் - அறுசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.)

கங்கை வார்சடைப் பரமர்தென் னருணையிற் கடைதொறு நீபாட
வங்கை யாவிரு செவிபுதைத் தேத்துவோ மருச்சுனன் றிருநாம
மெங்கை மார்செவி பொறுத்துநின் னிசைபெறு மிடிக்குரன மகிழ்வாரார்
மங்கை மார்செய லறிந்துகொள் பாணனே மயிலெனப் புகழ்வாயே. (௫௭)

(தலைவியைப்புகழ்தல் - அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

புடைசெறிந் தளிபாடு மிதழியந் தொடைமார்பர் புலிபதஞ் சலிநாடுவார்
சடையிளங் கயறுவு மருணையங் கிரிமீது மலரணங் கெனமேவுவார்
நடையுமிந் திரவேழ மிருகையிந் திரதாரு நயனமிந் திரநீலமே
யிடையுமிந் திரசால நுதலுமிந் திரசாப மிதழுமிந் திரகோபமே. (௫௮)

(உருவெளி - கலிவிருத்தம்.)

இந்திர கோபமா மிதழி பாகனார்
செந்தமி ழருணைநந் தேருஞ் செல்லுமே
சந்திர ரேகையுஞ் சமர வாளியு
மந்தர மேருவும் வளைந்து கொண்டவே. (௫௯)

(தலைவியைவியத்தல் - எழுசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.)

கொண்டலணி கண்டர்திரை கங்கையணி செஞ்சடையர் கொம்பரொரு பங்கி னுறைவா
ரண்டபதி ரண்டமள வங்கியென நின்றவதி ருங்கழலர் தங்க ருணையீர்
கண்டிளது கொண்டன்மிசை திங்களெழு கின்றதிது கண்டதிலை யுங்கண் முகமா
மண்டலமெ னும்புதிய திங்கண்மிசை கொந்தளக மஞ்சுகுடி கொண்ட வடைவே. (௬௰)

(வெண்பா)

அடுத்தமலர்ச் சென்னியின்மே லம்பிருக்கு மற்றோ
ரிடத்திலே நாரி யிருக்குந் - தடக்கையிலே
யேந்துசிலை விட்டிருக்கு மெம்மருணை நாதனார்
போந்து புரமெரித்த போது. (௬௧)

(கார்காலம் - கலித்துறை.)

போதற்கு மரிதான வருணாச லத்தீசர் பொன்மேருவா
யேதப்ப மெய்ப்பாவி மனமேபி ரிந்தாரி தென்னூர்கொலோ
வோதத்தி னீரோடு கனலுண்டு புயன்மீள வுமிழ்தன்மை போற்
காதற்குண் மடவார்மெய் பொன்பூசு மின்வீசு கார்காலமே. (௬௨)

(நாயகியைவேண்டல்- கொச்சகக்கலிப்பா.)

கார்வந்தா லன்னகறைக் கண்டனூர் சேங்கிரோன்
றேர்வந்தா லும்பொழில்சூழ் தென்னருணை நன்னாட்டி
லார்வந்தா லுந்தணியா தன்னமன்னி ரானாலு
நீர்வந்தா லாசை நெருப்பவியுங் காணுமே. (௬௩)

(பனிக்காலம் - கலித்துறை.)

காணம்ப ரந்தோலி னுடையாள ரருணேசர் கைலாசமேற்
றாணங்க ணிகர்தோள ருறைகின்ற நகரூடு சொரியாதரோ
பூணங்கை வளைசிந்த மடவார்ம னத்தேறு புகைபோலவேள்
பாணங்க ளுதிர்கின்ற துகள்போல வுறைகால் பனிக்காலமே. (௬௪)

(வெண்பா.)

பண்ணிறந்த வாசவரிற் பல்கோடி மாண்டாலு
மெண்ணிறந்த வேத ரிறந்தாலும் - கண்ணற்
கமைத்தவெல்லா மாண்டாலு மண்ணா மலையார்க்
கிமைப்பளவுங் கால மிலை. (௬௫)

(தலைவனைவேண்டல் - ஒன்பதின்சீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.)

இலைகொளி பரந்து மாரன் விடுகணை துரந்து தாடி யிடுமிரு நெடுங்கண் மாதரார்
விலகரிய கொங்கைமீது பழநழுவி வந்து பாலின் விழுவதென வந்து சேர்கிலீர்
மலைகரி குறிஞ்சி தேசி வைரவி சுரும்பு பாடும் வயலருணை மங்கை பாகரே
மலைமலர் கதம்ப தூளி மிருகமத சுகந்தம் வீசும் பரிமள வசந்த ராசரே. (௬௬)

(மதங்கு - ஒன்பதின்சீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.)

வசிகரம் வயங்கு நீல மயிநய புசங்கராச வலயமு மணிந்த தோளினு
ரசலதல மங்கை பாகர் பரிமள வசந்த ராச ரருணையின் வளங்கள் பாடியே
பிசைபெற வாங்கி யாடு பவுரிகொண் மதங்கி யார்த மிலகிவளர் கொங்கை யானையே
திசைபெற விருந்த யானை பிறகிட முனிந்து போர்செய் திறலிய மனந்த மானவே (௬௭)

(இதுவுமது-கட்டளைக்கலிப்பா.)

நதியைச் சூடதி ருங்கழ றுதனூர் நம்ப னூரரு ணாபுரி வீதிமேற்
சதியிற் பாடி நடிக்கு மதங்கியார் தந்த வாசை தரிக்கு மதங்கியார்
வதனத் தாற்சசி மண்டல மாறுமே வந்தி ருந்தவிம் மண்டல மாறுமே
கதியிற் கொண்டது மந்தக் கரணமே கண்ட பேர்க்கிலை யந்தக் கரணமே (௬௮)

(குறம்-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்)

அருணமணி மலைக்கிரிமேற் செங்கை வைத்தா யாசையா லருணகிரி யன்பன் மூதூர்
வருணமலைக் கின்னுரைப் பார்த்தா யுன்றன் மகிழ்தனுங்கண் ணுரமுதன் வந்து கேளாய்
தரணியிலுன் றனைச்சேர்வன் முருகன் போலத் தனையனையும் பெறுவையிலை தப்பு மாயித்
திருநிறைவன் டார்குழலாய் குறமும் பாடேன் நீண்டரிய கூடையும்யான் நீண்டி லேனே. (௬௯)

(மறம்-எண்சீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்)

நீண்டரிய மடற்பனையின் சருகை வாரிச் சிற்றிரும்பாற் சுற்றிவரச் செருக்கிக் கூட்டி
நீண்டதுவுஞ் சுருண்டதுமா வளைத்து சுற்றி நிருபமெனக் கொடுத்தெதிரோ நிற்குந் தூதா
தாண்டவமா நம்பரரு ணருணைநாட்டிற் றருமறப்பெண் டனைவேண்டிச் சமரிற் போந்து
மாண்டவரோ மியகோணல் வளைக ளுங்கள் வருங்கல்வழி வாயினடு மரங்க டாமே. (௭௰)

(மடக்கு-கலிவிருத்தம்.)

மண்டுங்கவனப் பரியாரும் வளைக்கவனப் பரியாரு
மெறுத்தவிரும் பிறையாரு மெவரும்விரும் பிறையாரும்
பொறுத்தசின விடையாரும் பொருந்துசின விடையாரு
மறத்தவளம் பதியாரு மருணைவளம் பதியாரோ. (௭௧)

(கலித்துறை.)

ஆரணி தூங்க னாரணி பங்க னருணேசன்
றூரணி யஞ்சுங் காரண நஞ்சந் தரியானேல்
வாரண மெங்கே சாரண மெங்கே மலர்மேவும்
பூரண மெங்கே நாரண மெங்கே போவாரே. (௭௨)

(தழை-கட்டளைக்கலிப்பா')

போந்த போதக நல்லுரி யாடையார் போர்வை யாளர் புகழருணைக்குளே
யீந்த ருத நனைந்தழை யையனே யெங்கண் மாத ரெடுத்து மகிழ்ச்சியாய்
மோந்த போது துவண்டது மெய்யிலே மொய்த்த போது புலர்ந்தது கண்ணினீர்ப்
பாய்ந்த போது நனைந்தது மீளவும் பார்த்த போது பசந்து மலர்ந்ததே (௭௩)

(இரங்கல்-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

மலரித ழித்தொடையான் மதியணி வித்தகனூர் மலைமக ளற்புதனூர் வயலரு ணைப்பதிசூழ்
குலவுமி டக்கழியே பலவுமி டக்கழியே குறவைவி னச்கயலே யுறவுமெ னச்கயலே
சலமிகு முற்படமே தலைவது முற்பலமே சருவும னத்திடரோ தழுவும னத்திடரோ
யிலைநெறி சற்பனையே யிருளா சற்பனையே யினியப னித்திரையே யி யிலை நித்திரையே. (௭௪)

(சுவடுகொடியிரங்கல்-எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்)

நித்த னம்பனரு ணாச லத்திருவை நின்று தேடியுழ னெஞ்சமே
பித்த டஞ்சரா டையே வாவிதல் இல்லை வேறுமர விதனிடை
யத்தி நின்றவிட மவ்வி டஞ்சிலைகொ ளரசு நின்றவிட முஃவிட
மெத்த வஞ்சியிள வஞ்சி நின்றவிட மிவ்வி டஞ்சுவடு மேவுமே. (௭௫)

(மடல்விலக்கு-கலிவிருத்தம்.)

ஏறுடை யண்ணலா ரேழை பாகனு
ராறணி சென்னியா ரருணை வெற்பரோ
கூறொரு பெண்ணையே கூடல் வேண்டுவோர்
வேறொரு பெண்ணையே வெட்டு வார்கொலோ. (௭௬)

(தவம்-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

வாய்ந்தநல மருந்தருந்தி யரிய யோக வகைபுரிந்து வாயுவுள்ளே யடக்கி ஞானங்
காய்ந்தவிருப் பூசியிலே தவஞ்செய் தாலுங் காயம்வருந் திடுவதல்லாற் கதிவே றுண்டோ
வாய்ந்ததிரு நீறணிந்தைந் தெழுத்தை யோதி யகமகிழ்ந்து சிவாகமத்தி னடைவை யோர்ந்தே
யேய்ந்தருணா சலத்தை வலங் கொண்டா ரன்றோ விமைக்குமுன்னே கைலைமலை யிலங்கொண்
[டாரே. (௭௭)

(மாலையிரத்தல்-அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இலங்கிய திங்க ளெழுந்தா லெங்கண்மின் வெங்கதி ரென்பாள்
கலங்கின ளாயினு மன்னாள் கட்கம லங்குவி யாவோ
துலங்கிய வெங்கதிர் தானே சோணகி ரிப்பெரு மானே
யலங்கலை யென்று கொடுப்பா யன்றது வெண்மதி யாமே. (௭௮)

(வெண்பா.)

ஆற்றுங்காற் கஞ்சத் தவர்தா மனைக்கண்ணர்
சாற்றுங்காற் கண்ணரவர் தந்தையார்-நீற்றுமதி
சூடும் பெருமானைச் சோணகிரி வித்தகனைத்
தேடுவதெங் கெய்ப்பாடியோ சேர்ந்து. (௭௯)

(கட்டளைக்கலித்துறை.)

சேறூர் திருவுடைச் செல்வரைக் காணிற் சிறப்புச்செய்து
பேறு தவருமுண் டோபுவி மீதிற் பெருத்தெழுந்து
சோறு சலவடி வாய்வெளி யாய்நின்ற சோதிதனைக்
காணாத கண்ணனைச் சொல்வர்செந் தாமரைக் கண்ண[illegible]னென்றே. (அ௰)

(தவம்-வெண்பா.)

என்றுமதிக் கன்று றிறைவரரு ணாபுரியி
னின்று தவம் புரியாய் நெஞ்சமே-பொன்றிரளான்
மாதரையா றுயிரைசூழ் மாதரையா னீதுவண்டு
மாதரையா றுமையென்சொல் வாய். (அக)

(இடைச்சியார்-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

சொல்லாடி னுமக்கிரண்டு பசுவே யுண்டு சுமந்திடுபாற் கலசமுமத் துணையா மீது
மல்லாம லிடையின்மிக விளைத்துப் போனீ ராயிருந்து மிடைமதியோ வகந்தை தானே
புல்லாரென் பணிதொடையா ரருணை நாட்டிற் பொதுவர்குல மங்கையரோ புவிமேற் கண்டே
சொல்லாருந் தனித்தனியே யெடுத்தக்கா லிரண்டுமுறா யாயலகன் றேகு வீரோ. (அஉ

(இதுவுமது-கட்டளைக்கலித்துறை.)

வீ[illegible]னை நல்கி மகமூறு செய்த விடைக்கொடியார்
காரணி கண்ட ரருணா சலத்திற் கலசங்கொண்டு
மோரது கூறு மிடையின மாதுக்கு முண்டகம்போ
லீரடி மெல்லினம் வல்லின மாகு மிருதனமே. (அ௩

(தலைவி யிளமை தலைவனுக் குணர்த்தல்-அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

தடறுக மணிவெயிலும் பிறையுமிழு நிலவுமெதிர் சடில நாத
ரடறுக நெடுஞ்சிலையா லசுரர்புர மெரித்தபிரா னருணை நாட்டிற்
றிடறுக மனையவரோ தனஞ்சிறிதுங் காணாத சிறியார் தம்மைக்
கடறுக நீர்வினவிப் பிணைதேடி முறிதனையேன் கைக்கொண் டீரோ. (அ௪)

(அறுசீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்.)

கையடைந்த மழுமானுஞ் செழுமானு முழைமானுங் கயலு மானு
மையடைந்த விழிமானு முடனுக வருணேசர் வருகு வாரோ
மெய்யடைந்த நிறங்கருகி விழிகளும்பஞ் சடைத்துவர மிடற்றி னாடே
யையடைத்து மடர்ந்துவர யமனடர்ந்து தொடர்ந்துவரு மன்னு தானே.
[ (அ௫

(தலைவன்சொல்லல்-வெண்பா.)

அன்று மலையா யருணையனே யிருமைக்
கன்றுலவுஞ் செய்தான் கமலத்தோ-னென்று
திணைக்கோலஞ் செய்த முலை யேந்திழையி னன்னை
மணக்கோலஞ் செய்தான் மதன் (அசு)

(கொற்றியார்-அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

மழலைமொழி யிலேசாலுங் கொடும்பார்வை யதனாலு மயக்க மாக்கிச்
சுழலுமிட ராவமெல்லாம் பட்டமெடுத்து முன்னடத் தோன்றினீரோ
யழலுருவ மானிருந்த வருணகிரி வரைநாட்டி லளிவந் தூதுங்
குழலொருசற் றுண்டாயி னெப்படியோ வாட்டிடுவீர் கொற்றியாரே (அஎ)

(இதுவுமது-கொச்சகக்கலிப்பா.)

ஆரிதழி சூடு மருணேசர் நன்னாட்டில்
வாரிருகு கொங்கை மயக்குங் கொற்றீரோ
பேரிருள் போய் நாடப் பிறைநிலவு கண்டொளிக்கக்
கூரியகண் ணிலவார் குழல்குறைந்தா லென்பாரோ. (அஅ)

(வஞ்சித்துறை.)

பானார் பொழினிறை
சோறு சலரடி
பேறு தவனுறு
மாறு நரகமே. (அகூ)

(வஞ்சிவிருத்தம்.)

நரக வாதையில் வன்பிறார்
தரணி மீதொரு கொன்பெறார்
சுரரு லோகமு மின்புறார்
ரருணை நாயக ரன்பறார். (உ0)

(வேற்றொலிவெண்டுறை.)

அருணையதி ருங்கழல ராறணிசெஞ் சடையாள ரரிவை பாகர்
கருணைநெடுங் கடலான பெருமானார் தாடொழுதார் கதியை நாடின்
மரணமிலா விமையவர்தம் வானுலக மன்றே
பொருணிறையு நான்மறையோர் புகலுமத்தாட் பூவே. (உக)

(இரங்கல்-கலித்துறை.)

பூவுண்ட விடையாள ரருணா சலத்தீசர் பொன்மேருவாய்
பாவுண்ட புகழாளர் பிரியே னெனச்சொன்ன பருவத்திலே
காவுண்டு குயிலுண்டு மயிலுண்டு கிளியுண்டு கனிதூவு[illegible]த
டார்வுண்டு குருகுண்டு திருகுண்ட மனனுண்டு மறவாமலே. (௬௨)

(வெறிவிலக்கு-கலிவிருத்தம்.)

வாங்குவில் லேர்நுதல் வயங்கு மாதரீ
ரீங்கிவ ளொருவர்கை யேட்டை வாங்கினு
லாங்கடு வணிந்தவ ரருணை நாட்டிலே
நீங்கண்மை யழிப்பது நீதி யல்லவே. (௬௩)

(தலைவியைப்புகழ்தல்-கட்டளைக்கலித்துறை.)

அள்ளற் கடல்விட நீங்காத கண்ட ரருணைவெற்பிற்
பிள்ளைப் பிறையுஞ் சிலையுமொப் பாநுதற் பேதைநல்லாள்
வள்ளற் குழை[illegible]பொரு கண்ணுக்குத் தோற்றம்பும் வாரிதியுங்
கள்ளக் [illegible]லு மிராசியின் மீனுங் கடைபட்டதே. (௬௪)

(வலைச்சியார்-அறுசீர்க்கழிநெடில்-ஆசிரியவிருத்தம்.)

தேவியிட மகலாத வருணகிரி வளநாட்டிற் றெருக்க டோறு
மாவிரத முனிவரெலா மயல்கூரக் கயல்கூறும் வலைச்சியாரே
காவிதிகழ் வாவியிலே மீன்பிடித்து வருவோரைக் கண்டோங் கண்டோ
ராவியெலாம் பிடித்திழுக்கு முமைப்போல வொருவரைக் கண்டறிந்தி லோ
[ மே. (௬௫)

(இதுவுமது-வெண்பா.)

மேலா றணிசடையார் வீறருணை வீதியிலே
மாலாக வந்த வலைச்சீரோ - காலா
லிருவரா லுங்காட்டும் யான்பிடிக்கக் காதி
லொருவரா லுந்தீரு மோ. (௬௬)

(செவிலிநற்றாயைத்தேற்றல்-எண்சீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

ஒருவ ராலு மணுகாத நாளிலே வுயிரி னான வொருசெல்வ னாசையான்
மருவி னாலு மெனதாறு நாளையே வழிக டோறு மினிநாடி மீரவே
கருணை நீதி மனைபேணு மாதுடன் கடல்க ளேழு மலையேழு மேழுமா
வருணர் சூழு முலகேழு மேழுமா வருணை நாதர் சரபாவ தாரமே. (௧௭)

(வண்டோச்சிமருங்கணைதல்-அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.)

தாரிலங்கு மறைமுடிமி னடித்தருணா மருணேசர் தமது நாட்டி
னூரியர்மேன் ம[illegible]கிழு மளியினங்கா ளொருவார்த்தை நவிலக் கேளீ
ரோரிருக்குங் கைதையெலாஞ் சோறிருக்க நீரிருக்கு மிடங்க டோறும்
வேரிமலர்த் தேனிருக்க விவர்கூழை விரும்பிவந்தேன் விழுகின் றீரோ (௧௮)

(தலைவியவயவவருமைசொல்லல்-அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்)

ஏமநெடுஞ் சிலைவளைத்த பெருமானா ரருணகிரி யிறைவர் நாட்டிற்
றாமரைமண் டபத்துறையு மடந்தையிடை யெழுதவென்றாற் றலைவ னாரோ
மாமுயற்சொம் பினிலேறி விசும்பலரைப் பறித்துமுனம் வடிவி லாதோ
னமைமயிர்க் கயிறுகொடு தொடுத்தணிந்த புதுமையினு மருமை யாமே (௧௧

(தலைவிகையுறை யேற்றமைசொல்லல்-கட்டளைக்கலிப்பா.)

ஆர்வ லர்க்கழி யாவர நல்குவா ரத்த னாரரு ணாபுரி வெற்பமோ
பார்வி யப்புற நீர்தரு மாமணி பட்ட பாடு பகர்ந்திட லாகுமோ
கார்கு ழற்கு முடிமணி யாயிரு கண்கண் மீதுறு கண்மணி யாய்முலை
சேர்த லுற்ற பொழுதிரு குன்றிலுஞ் சென்றுலாவுந் தினமணி யானதே. (௰)

திருவருணைக்கலம்பகம்முற்றுப்பெற்றது.

இதுவரையில் அச்சிற்பதித்தானபுத்தகங்கள்

| பெயர். | விலை... ரூபா. | அணா. | பெயர். | விலை... ரூபா. | அணா. |
|---|---|---|---|---|---|
| திருவள்ளுவர்குறளுரை. | ௮ | ,, | அபிராமியந்தாதி. | ,, | ௪. |
| இலக்கணச்சுருக்கவினாவிடை. | ௩ | ௮. | போற்றிக்கலிவெண்பா | ,, | ௨. |
| நன்னூற்காண்டிகையுரை. | ௩ | ௮ | சோணசைலமாலை. | ,, | ௪. |
| ஆத்திசூடியுரை. | ,, | | திருப்புகலூரந்தாதி. | ,, | ௪. |
| கொன்றைவேந்தனுரை. | ஆ ௪-ம். | ௮. | பழமலையந்தாதி. | ஆ ௨-ம். ,, | ௫. |
| வெற்றிவேற்கைமூலம். | | | செந்திலந்தாதி. | | |
| பாலபோதம். | | | திருவருணைக்கலம்பகம். | ,, | ௮. |
| வாக்குண்டாமுரை. | ஆ ௩-ம். ,, | ௰. | திருக்கருவைக்கலித்துறையந்தாதி. | ,, | ௪. |
| நல்வழியுரை. | | | திருக்கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி. | ,, | ௪. |
| நன்னெறியுரை. | | | திருமுருகாற்றுப்படை. | ,, | ௨. |
| அருணகிரியந்தாதி. | ,, | ௪. | சௌந்தரியலகரி. | ,, | ௪. |